**சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் அபிவிருத்தி வசதி செயற்திட்டம் - 2013**

---

சிறிய மற்றும் நடுத்தர முயற்சி அபிவிருத்தி வசதி செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 நவம்பர் 08 ஆம் திகதிய 4804 - எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II பீ 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் அபிவிருத்தி வசதி செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழான அபிவிருத்தி நிதித் திணைக்களம் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் செயற்திட்டத்தின் அமுலாக்கல் நிதி, திட்டமிடல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும். உலகளாவிய நிதிச் சிக்கலால் பாதிப்பிற்குள்ளான இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு குறுகிய கால நிதியளித்தலை உள்ளடக்கும். நிதியளிப்பிற்கான அணுகுதலை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இச் செயற்திட்டம் பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது.

**(அ) நிதியளித்தலும் ஆபத்தினைப் பகிர்தலும்**

---

(i) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உப செயற்திட்ட கடன்களை வழங்கும் நோக்கத்திற்காக பங்குபற்றும் நிதி நிறுவனங்களுக்குக் (பீஎவ்ஐஎஸ்) கடனுதவி வழிகளை உருவாக்கி அத்தகைய சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு உற்பத்தித்திறன் மிக்க முதலீடுகளை வழங்குதல்.

(ii) பங்குபற்றும் நிதி நிறுவனங்களினால் ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு வந்த சிறிய மற்றும் நடுத்தர முயற்சி உப செயற்திட்டக் கடன் தொகுதிகளுடன் தொடர்புடைய ஆபத்து பகிர்ந்து கொள்ளும் வசதிகளை ஏற்படுத்துவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான நிதி விதிகளை அணுகுவதனையும் அதற்கான நியதிகளையும் விரிவாக்கல்.

**(ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வங்கித் தொழிலின் கொள்கைகளையும் இயலளவையும் விரிவடையச் செய்தல்**

---

(i) சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் மற்றும் அவ்வாறான முயற்சிகளுக்கு நிதியளித்தல் தொடர்பாகவும் அந்நிதியை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்குமென பங்குபற்றும் நிதி நிறுவனங்களது இயலளவைக் கட்டியெழுப்புதல்.

(ii) ஆபத்தினை இனங்கண்டு அதற்கான நடவடிக்கைகளை சிறிய மற்றும் நடுத்தர முயற்சி நிதியளிப்பிற்காக இயலுமான சூழலைப் பலப்படுத்துதல் தீர்வை மேற்கொள்ளுதல் உள்ளடங்கலாக

(iii) நிர்வாக மற்றும் நிதி முகாமைத்துவம், கொள்வனவு, பணவளிப்பு என்பவற்றை உள்ளடக்கிய செயற்திட்ட முகாமைத்துவம், அமுலாக்கல், மேற்பார்வையிடல் மற்றும் மதிப்பாய்வு என்பவற்றிற்கு ஆதரவளிப்பதற்கு ஏற்பாடு செய்தல்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 6,455.77 மில்லியனிற்கு சமமான எஸ்டீஆர் 37,800,000 ஐ நிதியளிப்பதற்கு சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் (ஐடீஏ) உடன்பாடு காணப்பட்டுள்ளது. செயற்திட்டமானது 2010 மே 01 இல் தனது நடவடிக்கைகளைத் தொடங்கியிருந்ததுடன் 2014 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது. பின்னர், செயற்திட்டக் காலம் 2015 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

செயற்திட்ட ஆக்கக் கூறுகளின் பிரகாரம் நிதியளித்தல் விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

| கூறு | | நிதியளித்தல் | |
|---|---|---|---|
| | | யூ.எஸ்.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| **கூறு 1** | | | |
| **நிதியளித்தலும் ஆபத்து பகிர்தல் வசதியும்** | | | |
| (அ) | கடன் வழங்கும் மூலம் | 28 | 3,149.16 |
| (ஆ) | ஆபத்து பங்கிடல் வசதி | 13 | 1,462.11 |
| **கூறு 2** | | | |
| **சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வங்கித் தொழிலின் கொள்கைகளையும் இயலளவையும் விரிவடையச் செய்தல்** | | | |
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்கும் நிறுவனங்களின் இயலுமையை அதிகரித்தல் | 7 | 787.29 |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் நிதியினை ஈடுபடுத்தக்கூடிய சுற்றாடலை வலுப்படுத்துதலுக்கு ஆதரவளித்தல் | 1 | 112.47 |
| (இ) | செயற்திட்ட அமுலாக்கல் கூறிற்கு உதவி வழங்குதல் | 4 | 449.88 |
| | ஒதுக்கப்படாத நிதிகள் | 4.4 | 494.86 |
| மொத்தம் | | **57.4** | **6,455.77** |

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு அமைய, தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும், அமுலாக்கலும், அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை. நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பரீட்சித்தல், நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமையினால் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் முக்கிய மதிப்பீடுகள், நிதிக்கூற்றுக்களது ஒட்டு மொத்தச் சமர்ப்பணம் மீதான மீளாய்வு என்பவற்றைக் கணக்காய்வு உள்ளடக்கியது. எனது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய, கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன பெறப்பட்டன என்றும் அதற்கமைய, எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்குத் தேவையெனக் கருதப்படும் முறைமைகளும் கட்டுப்பாடுகளும், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் கணக்கீட்டுப் பதிவேடுகள் போன்றவற்றையும் பரிசீலனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்ட முகாமை மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு ஏற்ப உள்ளகக் கட்டுப்பாட்டின் கண்ணோட்டத்தில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்தனவா என்பதும்

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்போரின் நிதியிலிருந்து செயற்திட்டம் மீதான செலவு, செயற்திட்டத்தின் நிதிசார் மற்றும் பௌதீகரீதியான முன்னேற்றம், செயற்திட்டத்தின் செயற்பாடுகளிலிருந்து உருவாகும் சொத்துக்களும் பொறுப்புகளும், கடன் முதலியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் போன்வற்றினைக் காட்டுவதற்குத் தொடர்ச்சியான அடிப்படையில் போதியளவு கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளதா என்பதும்

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்டவாறு நடைபெற்றனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதி, பொருட்கள், உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்

(உ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காக கடைப்பிடித்த வகைப்படுத்தலின் பிரகாரம் செலவினம் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீளளிப்புகளும் செயற்திட்டம் பேணிவரும் புத்தகங்களிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக் கொணரப்பட்டுள்ளனவா என்பதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் விதந்துரைத்த வேண்டுதல்களின் படி மீள் நிரப்பலிற்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்தவதற்கு நியாயமாக நம்பிக்கை வைக்கக்கூடியதாக இருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் விதித்துரைத்தவாறான நிதியளிப்புக் கட்டுப்பாட்டு உடன்பாடு காணப்பட்டனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசீலனையிலிருந்து தென்படுவதும் சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இவ்வறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கல்களின் விளைவுகளைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியுள்ளதெனவும் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கமைய, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையினை விளக்குகின்றன என்பதும்

(ஆ) எதன் பொருட்டு நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டன என்பதும்

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீளளிப்புக்கள் என்பன செயற்திட்டம் பேணியுள்ள ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளன என்பதும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் விதந்துரைத்த வேண்டுதல்களின் படி மீள் நிரப்பலிற்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்தவதற்கு நியாயமாக நம்பிக்கை வைக்கக்கூடியதாக இருந்தன என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்தஞ் செய்வதற்கு முகாமைத்துவம் திருப்பதிகரமான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன என்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடு உடன்பாடு ஏற்பட்டுள்ளன என்பதும்

எனது அபிப்பிராயமாகும்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 637,663,360 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 3,053,472,299 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், 2012 ஆம் ஆண்டிற்கான செலவினம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பைப் பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 303,806 | 415,416 | 15,711,564 |
| உப கடன் வழங்கலிற்காக பங்குபற்றும் நிதிசார் நிறுவனங்களுடன் கடன் செயற்பாடுகள் | 612,070,270 | 1,521,446,408 | 2,951,978,018 |
| செயற்பாட்டுச் செலவினம் | 13,416,171 | 11,929,939 | 52,627,464 |
| பங்குபற்றும் நிறுவன உத்தியோகத்தர்களின் பயிற்சியும் அபிவிருத்தியும் | 11,668,557 | 17,533,657 | 32,995,697 |
| செயற்திட்ட செயற்பாட்டுப் பிரிவினால் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கான பயிற்சி | 159,556 | - | 159,556 |
| | 637,663,360 | 1,551,325,620 | 3,053,472,299 |

### 4.2 விசேட (டொலர்) கணக்கு

செயற்திட்டம் பேணிய புத்தகங்களும் பதிவேடுகளும் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கும் அமைய, 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட விசேட(டொலர்) கணக்கினது செயற்பாட்டின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| | யூ.எஸ். டொலர் | ரூபா |
|---|---|---|
| | -------------------- | ------------- |
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 10,226,827 | 1,300,451,518 |
| **கூட்டுக** | | |
| -------------- | | |
| மீளளிப்புகள் | 5,403,861 | 708,731,685 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 20,975,967 |
| | ---------------------- | --------------------------- |
| | 15,630,688 | 2,030,159,170 |
| **கழி** | | |
| -------------- | | |
| பற்றுதல்கள் | 4,956,349 | 634,457,367 |
| | -------------------- | ----------------------- |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 10,674,339 | 1,395,701,803 |
| | ========== | ============ |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

இந்த செயற்திட்டத்தின் மூலம் அனுசரனை வழங்கப்படுகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான செயற்பாடுகளினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக முழுமையான கணக்காய்வை மேற்கொண்டு அறிக்கை வழங்குமாறு வெளிநாட்டு தூதுக்குழு ஊடாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பொருத்தமான விசேட நிபுணரை கண்டுபிடிக்க இயலாமை காரணமாக அவ்வாறான சுற்றாடல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் செற்பாட்டு மீளாய்வு

## 6.1 நிதியத்தின் பயன்பாடு

மீளாய்வாண்டு மற்றும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியளிப்பு, பாதீட்டு நிதியேற்பாடு மற்றும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கியமான புள்ளிவிபரங்கள் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு இணங்கப்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்ட தொகை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| | **யூ.எஸ். டொலர் மில்.** | **ரூபா. மில்.** | **ரூபா. மில்.** | **ரூபா. மில்.** | **ரூபா. மில்.** |
| ஐடீஏ | 57 | 6,456 | 900 | 638 | 3,053 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜீஓஎஸ்எல் | இல்லை | இல்லை | 8 | 8 | 27 |
| | --------- | --------- | --------- | ---------- | --------- |
| | 57 | 6,456 | 908 | 646 | 3,080 |
| | ==== | ==== | ==== | ====== | ===== |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இடர்களைப் பகிர்ந்தளிப்பதற்காக யூஎஸ்.டொலர் 13 மில்லியனுக்குச் சமமான ரூபா 1,462 மில்லியன் தொகை அல்லது கடன் உடன்படிக்கையின் மூலம் இணங்கப்பட்ட தொகையிலிருந்து 23 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) யூஎஸ்.டொலர் 01 மில்லியனுக்குச் சமமான ரூபா 112 மில்லியன் தொகை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களின் ஈடுபடுத்தும் மூலதனத்தில் சாதகமான நிலையைத் தோற்றுவிப்பதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.2 பங்குபற்றும் நிதி நிறுவனங்களின் மூலம் விடுவித்த கடன்கள் மீது எழுந்த விடயங்கள்

செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் கடன் அங்கீகரிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களின் எண்ணிக்கை, பங்குபற்றும் நிதி நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை, விடுவிக்கப்பட்ட கடன் தொகை மற்றும் ஒரு முயற்சியாளருக்காக அங்கீகரிக்கப்பட்ட சராசரி கடன் தொகை என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **பங்குபற்றும் நிதி நிறுவனத்தின் பெயர்** | **கடன் அங்கீகரிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களின் எண்ணிக்கை** | **பங்குபற்றும் நிதி நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை** | **2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு விடுவிக்கப்பட்ட கடன் தொகை** | **ஒரு முயற்சியாளருக்காக அங்கீகரிக்கப்பட்ட சராசரி கடன் தொகை** |
|---|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| இலங்கை வங்கி | 64 | 493 | 439 | 7.7 |
| மக்கள் வங்கி | 68 | 360 | 323 | 5.3 |
| வர்த்தக வங்கி | 80 | 524 | 504 | 6.5 |
| டீஎப்சீசீ வங்கி | 26 | 366 | 364 | 14.1 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 21 | 352 | 335 | 16.8 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 88 | 315 | 245 | 3.6 |
| ஹற்றன் நஷனல் வங்கி | 18 | 330 | 322 | 18.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பத் வங்கி | 49 | 419 | 420 | 8.55 |
| | ----- | ------- | ------ | ------ |
| | 414 | 3,159 | 2,952 | 7.63 |
| | ==== | ==== | ==== | === |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) தனியார் வங்கி மூலம் ஒரு முயற்சியாளருக்கு அங்கீகரிக்கப்பட்ட சராசரிக் கடன் மற்றும் வழங்கப்பட்ட தொகை அரசாங்க வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட சராசரிக் கடன் தொகையை விட உயர்வான பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் அரசாங்க வங்கியினால் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களிற்கு உதவியினைக் காண்பிப்பதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் உள்ளபடியான தேவைகளை இனங்கண்டு அவர்களை உயர்த்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை இதன் மூலம் தெளிவாகின்றது.

(ii) கிடைத்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பங்குபற்றும் நிதி நிறுவனங்களினால் 7,647 முதலீட்டாளர்களுக்கு பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 3,159 சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களிற்கு மாத்திரம் கடன் வழங்கப்பட்டிருந்தது.

(iii) கிடைத்த தகவல்களின் பிரகாரம், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களினால் 254 ஆண்களுக்கும் 1,396 பெண்களுக்கும் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டதா என்பதைப் பரீட்சிப்பதற்காக போதியளவான தகவல்கள் செயற்திட்ட செயற்பாட்டுப் பிரிவினால் பேணப்பட்டிருக்கவில்லை.

(iv) கடன் அங்கீகரிக்கப்பட்டு 06 மாதத்திற்குள் முதலாவது தவணைப் பணத்தை விடுவிப்பதற்கு பங்குபற்றும் நிதி நிறுவனங்களினால் இணங்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுப் பெறுமதி ரூபா 26.5 மில்லியன் தொகையான 02 கடன் தொகைகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விடுவிக்கப்பட்டிராமையினால் இந்த முயற்சியாளர்களுக்கு கடன் அங்கீகரிக்கப்பட்டு ஒரு வருடமும் 10 மாதங்களும் கடந்திருந்த போதிலும் கடன் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 பங்குபற்றும் நிதி நிறுவனங்களினதும் முயற்சியாளர்களினதும் பதவியணியின் இயலளவை அதிகரிப்பதில் எழுந்த விடயங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் கூறு இலக்கம் 02 இன் கீழ் கடன் வழங்கும் நிறுவனத்தினதும் முயற்சியாளர்களினதும் இயலளவை அதிகரிப்பதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தி பங்குபற்றும் நிதி நிறுவனங்களின் 5,580 ஊழியர்கள் மற்றும் 7,890 முயற்சியாளர்கள் அந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சமுகமளித்திருந்தனர். சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், பங்குபற்றும் நிதி நிறுவனங்களின் ஒரு ஊழியருக்கு பயிற்சியளிப்பதற்காக ரூபா 4,188 சராசரிக் கிரயமும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முதலீட்டாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ரூபா 1,213 மாத்திரம் ஏற்பட்டிருந்த அதே நேரம் மீளாய்வாண்டின் போது 414 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களுக்கு மாத்திரம் கடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 நவம்பர் 06 ஆந் திகதி சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் சில பிரதிநிதிகளினால் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் பல

நலனாளிகளுக்கு தமது முயற்சிகளின் சராசரி நிருவாகம் மற்றும் தொழல்நுட்ப அறிவு தொடர்பாக மேலதிக பயிற்சி தேவையாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட செயற்பாட்டுப் பிரிவின் மூலம் இயலளவை அதிகரிப்பதற்காக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 427 மில்லியனில் ரூபா 33 மில்லியன் மாத்திரம் இறுதிவரையில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) ஒரு உத்தியோகத்தரைப் பயிற்சியளிப்பதில் ஏற்பட்ட கிரயத்திலும் ஒரு முயற்சியாளரைப் பயிற்சியளிப்பதில் ஏற்பட்ட கிரயத்திலும் குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இலங்கை வங்கியினால் ஒரு வங்கி உத்தியோகத்தரை பயிற்றுவிப்பதற்காக ஆகக் குறைந்த கிரயமான ரூபா 1,096 ஆக இருந்த அதே நேரம் ஹற்றன் நஷனல் வங்கி ஒரு வங்கி உத்தியோகத்தருக்காக ரூபா 19,002 உயர்ந்த கிரயமாக இருந்தது. ஒரு முயற்சியாளரை பயிற்றுவிப்பதற்கான ஆகக் குறைந்த கிரயம் ரூபா 498 தொகை வர்த்தக வங்கியினால் செய்யப்பட்டிருந்த அதே நேரம் சம்பத் வங்கியின் மூலம் ஆகக் கூடிய கிரயமான ரூபா 3,032 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஆதலால், பயிற்சிக்காக உள்ளடக்கம் மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட வளங்களின் சகல பங்குபற்றும் நிதி நிறுவனங்களிற்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய அசாதாரண நிலைமை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**6.4 நிலுவையாகவிருக்கின்ற கடன் மற்றும் வட்டி மீதிகள் மீதான இடர்களைப் பகிர்ந்தளிப்பதில் எழுந்த விடயங்கள்**

---

கடன் உடன்படிக்கையின் ‘‘உ’’ பிரிவின் பிரகாரம், கடன் மற்றும் வட்டி மீதான அறவீட்டுத் தன்மை மீதான அறவீட்டைக் குறைப்பதற்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இடர்களைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் விடுவிக்கப்பட்ட ரூபா 1,462 தொகையான கடன்கள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இடர்களைப் பகிர்ந்தளிப்பதற்குரிய எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6.5 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களுக்கு பங்குபற்றும் நிதி நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட கடன்களுக்குரிய வட்டியை அறவிடல் மற்றும் இடர்களைப் பகிர்ந்தளிப்பதில் எழுந்த விடயங்கள்**

---

செயற்திட்டத்தினால் பங்குபற்றும் நிதி நிறுவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் ‘‘ஜே’’ பிரிவின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கியினால் (சீபீஎஸ்எல்) அரையாண்டு ரீதியாக வெளியிடப்பட்ட சராசரி நிலையான வைப்பு வட்டியினை அடிப்படையாகக் கொண்டு கடன் வட்டி தீர்மானிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை மத்திய வங்கியின் பயன்படுத்தும் வட்டி வீதத்தை ஈடுபடுத்துவதற்குப் பதிலாக பங்குபற்றும் நிதி நிறுவனங்களினால் 8.69 சதவீதம் தொடக்கம் 15.93 சதவீதம் வரையிலான பல்வேறு நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களின் கடன் மீதியின் அடிப்படையில் அறவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மூலம் சகல பங்குபற்றும் நிதி நிறுவனங்களினால் அறவிடவேண்டிய வட்டி வீதத்தை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தானத்துடன் இடர்களைப் பகிர்ந்தளிக்கும் வசதிகள் தயாரிக்கப்படாமையினால் நலனாளிகளுக்கு இடர்களுக்கான பங்களிப்புடன் உயர்ந்த வட்டி வீதத்தில் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. மேலும் இடர்களைப் பகிர்ந்தளிக்கும் வசதிகள் காலரீதியாக செயன்முறையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தால் மீளாய்வாண்டின் போது கடன் பெற்ற நலனாளிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற 14.88 சதவீத வட்டியில் அரைப்பங்கு வரையாக வட்டிவீதத்தைக் குறைக்க முடியுமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.